**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 50/2020</u>**

இந்நீதிமன்றத்து உதவியாளர் திரு.சு.குணசேகரன் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமுலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025** – ஆம் ஆண்டு **மார்ச்** மாம் **05** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி – 05.03.2025**

**பெயர் – முகமது பெகாமி**

**த/பெ – கே.எம்.பஷீர்**

**சாட்சி – DW1**

**விசாரணை தொடங்கும் நேரம்–11.57. a.m**

**<u>குறுக்கு விசாரணை–</u>**

1. 2008– ம் வருடத்தில் எனது தந்தையார் எனக்கும் எனது சகோதரர் கும் செட்டில்மெண்ட் எழுதி வைத்த தேதியில் இருந்த தேதியில் இருந்து அந்த இடம் காலியாக உள்ளதா என்றால் ஆமாம். அந்த இடத்தில் நான் தான் அனுபவத்தில் உள்ளேன். 2008–லேயே என் பெயரிலும் எனது சகோததரர் பெயரிலும் பட்டா வந்து விட்டதா என்றால் வந்துவிட்டது. 2008 லிருந்து நான் மேற்படி இடத்தில் அனுபவத்தில் உள்ளதா கூறும் நிலையில் எவ்வாறு அனுபவித்து வருகிறேன் என்றால் 2008 முதல் விவசாயம் செய்து வருகிறேன்.

2. 1 ஏக்கர் 60 செண்ட் நிலம் ஒரே நிலமாக இருக்குமா அல்லது துண்டு, துண்டாக இருக்குமா என்றால் ஒரே நிலமாக இருக்கும். மேற்படி நிலத்தில் கோவில் மற்றும் நீர்தேக்க தொட்டி மட்டுமே இருப்பதாக நான் கூறும் நிலையில் அங்கே 10 பேர் வீடு கட்டி வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 2008–க்கு பின்னர் மேற்படி இடத்தில் நான் அனுபவத்திடல் இல்லை என்றால் சரியல்ல நான் அனுபவத்தில் தான் இருக்கிறேன். 2020 ல் நில அளவையர்கள் கொண்டு நான் அளந்ததாக கூறும் நிலையில் எதற்காக அளந்தேன் என்றால் அந்த இடத்தை பாதுகாத்து சுற்று சுவர் அமைக்க அளக்க முற்பட்டேன்.

3. அந்த நாளில் வாதி தரப்பில் பிரச்சினை செய்ததாக கூறும் நிலையில் எத்தனை நபர்கள் வாதி தரப்பில் இருந்து வந்தனா் என்றால் 6 லிருந்து 7 நபர்கள் வந்தனர். அதை தொடர்ந்து நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாக கூறும் நிலையில் யார் மீது புகார் கொடுத்தேன் என்றால் சிவபூஷனம், இராஜேஷ் மற்றும் மகேஸ் ஆகியோர் மீது புகார் கொடுத்தேன். மேற்படி புகார் மீது காவல்நிலையத்தில் விசாரணை மேற்கொண்டார்களா என்றால் மேற்கொண்டார்கள் அதில் என்ன கூறினார்கள் என்றால் விசாரனை செய்வதாக கூறினார்கள். ஆனால் அதன்பிறகு மேல் நடவடிக்கை எடுக்கவில்லையா என்றால் இல்லை.

4. புகாரின் மேல் கொடுத்த சி.எஸ்.ஆர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை தொலைந்துவிட்டது. அதுபோல் புகார் கொடுக்கவில்லை நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**(மேலும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**
**விசாரணை முடியும் நேரம். 12.12. p.m.**